RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 37 | பிப்ரவரி.13 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# எங்கள் சாதனைகளை நாங்கள் தான் முறியடிப்போம்! : முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை



சென்னை : பிப்.13-

'நாங்கள் செய்த சாதனைகளை அடுத்து வரக்கூடிய ஆட்சியில் நாங்கள் தான் முறியடிப்போம் . நாட்டின் வளர்ச்சியை விட தமிழகம் வளர்ச்சி அதிகம் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

சென்னை கிண்டியில் ஐம்பத்து இரண்டு தொழில் நிறுவனத் திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார் . இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது . ரூபாய் எழுபத்து நான்காயிரத்து இருநூற்று அறுபத்து ஏழு கோடியில் எழுபத்து ஒன்று புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி , ஐம்பத்து இரண்டு தொழில்நிறுவன திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார் . நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது

வளர்ச்சி . திராவிட மாடல் என்றால் மக்கள் நன்மைக்காக இருக்கக்கூடிய மாடல் . இதையெல்லாம் உலகுக்கு எடுத்துச்சொல்லக்கூடிய மாநாடுதான் இந்த ' தமிழ்நாடு முதலீடுகள் செயலாக்க மாநாடு' . தமிழகம் தான் முதலீட்டாளர்களின் முதல் முகவரி என்று அனைத்து புள்ளி விவரங்களும் சொல்கிறது . இன்று தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி நாட்டின் சராசரியை விட பதினொன்று . பத்தொன்பது சதவீதம் அதிகமாக இருக்கிறது

கடந்த ஆண்டு இந்தியாவின் உற்பத்தித்துறையின் வளர்ச்சி நான்கு . ஐந்து சதவீதம் . அதே சமயம் தமிழகத்தின் வளர்ச்சி அதை விட மூன்று மடங்கு அதிகமாக பதினான்கு . ஏழு சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது

மின்னணு பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு நாற்பத்து ஒன்று சதவீதமாகும் . முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி புரிந்துணர்வு போட்டுட்டோம் , நியூஸ்ல வந்துருச்சினு இருக்க மாட்டோம் . அந்த நிறுவனம் செயல்பாட்டுக்கு வந்து , நம்ம இளைஞர்களுக்கு ஆஃபர் லெட்டர் கையில வர வரைக்கும் பார்த்துப் பார்த்து பாலோ செய்கிறோம் . தமிழகத்தில் மட்டும் ஒப்பந்தம் போட்ட குறுகிய காலத்திலேயே தொழில் நிறுவனங்கள் எப்படி செயல்பாட்டுக்கு வருகிறது என பலரும் கேட்கின்றனர்

இது உறுதி . ஒருங்கிணைத்து பணிகளைச் செயல்படுத்தக் கூடிய அணி , மனித வளம் , நிலம் என அனைத்து அம்சங்களும் இங்கே இருக்கின்றன . இரண்டாயிரத்து முப்பதாம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்டுவது என்ற டார்கெட் இருக்கிறது . அதனால் நிறைய முதலீட்டாளர்களை அழைத்து வாருங்கள் . தமிழகம் தொழில்துறையில் நாங்கள் செய்துள்ள ரெக்கார்ட்ஐ அடுத்து நாங்கள் வந்து தான் முந்தப் போகிறோம் . அடித்துச் சொல்கிறேன் . இது உறுதி . இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்

## “அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட எதை எதையோ பேசுகின்றனர்” ராமதாஸ்



சென்னை: பிப்.13-

“அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் எதை எதையோ பேசுகின்றனர்” என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் சூழலில், பாமகவில் தந்தை மகன் மோதல் இன்னும் முடிவுக்கு வந்தபாடில்லை. இந்திய தேர்தல் ஆணையம் அன்புமணி தரப்புக்கே கட்சி, சின்னத்தை அங்கீகரித்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் பேசும்போது, “ஒரு கூட்டம் பொய் சொல்வதையே அரசியலாகக் கொண்டு செயல்படுகிறது. அந்த கூட்டத்தை நாங்கள் கட்சியில் இருந்தே நீக்கிவிட்டோம். அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தே நீக்கிவிட்டோம். அவருடன் சேர்ந்த ஒரு கூட்டம், பொய் பேசுவது, ஏளனமாகப் பேசுவது, மனம் புண்படும்படி பேசுவது எனப் பேசிவருகிறார்கள்.

அவர்கள் என்னைப் பற்றி மட்டும் பேசவில்லை, 26 ஆண்டு காலம் ஓய்வின்றி உழைத்த ஜி.கே மணியை வசைபாடுவதையும் நாளும் தொழிலாக செய்து வருகிறார்கள். அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் எதை எதையோ பேசுகின்றனர்.” என்று தெரிவித்தார்.

## டாஸ்மாக்கில் பாட்டிலுக்கு ரூ.20 கூடுதலாக வாங்கினாலும் திமுகவினர் மீது நடவடிக்கை எடுப்பதில்லை

### தங்கமணி குற்றச்சாட்டு



சென்னை: பிப்.13-

‘டாஸ்மாக்கில் பணியாற்றும் திமுக தொழிற்சங்க நிர்வாகிகள், ஒரு பாட்டிலுக்கு 20 ரூபாய் கூடுதலாக வாங்கினாலும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை’ என முன்னாள் அமைச்சர் தங்கமணி குற்றம்சாட்டி உள்ளார்.

ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ்மாக் ஊழியர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் நேற்று சென்னையில் பேரணி நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, ஜெயக்குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணி, சிந்தாரிப்பேட்டையில் தொடங்கி எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் நிறைவடைந்தது. இதில் முன்னாள் அமைச்சர் தங்கமணி பேசியதாவது:

மாதம் ரூ.5 ஆயிரம் கோடி வருமானம்: அரசு டாஸ்மாக் கடைகளை குறைப்பதாகக் கூறிவிட்டு, தங்களுக்கு நெருக்கமானவர்களுக்காக ஊருக்கு ஊர் 10க்கும் மேற்பட்ட எஃப்.எல்.2 உரிமங்களை வாரி வழங்கிவிட்டனர்.

டாஸ்மாக் மூலம் அரசுக்கு மாதம் ரூ.5,000 கோடி வருமானம் கிடைக்கிறது. ஆனாலும், அந்த வருமானத்தை ஈட்டித் தரும் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற மறுக்கிறது.

நீதிமன்ற உத்தரவு என்ற பெயரில், காலி பாட்டில்களை ஊழியர்களே திரும்பப்பெற வேண்டும் என நிர்வாகம் கட்டாயப்படுத்துகிறது. மிகக் குறுகிய இடத்தில் இயங்கும் டாஸ்மாக் கடைகளில், காலி பாட்டில்களைச் சேமித்து வைக்க இடவசதி இல்லை.

இதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டால் ஊழியர்களுக்குத் தொற்றுநோய்கள் பரவுகின்றன. எனவே, காலி பாட்டில்களைத் திரும்பப் பெறுவதற்கு தனியாக குடோன் வசதி செய்து தரப்பட வேண்டும்.

பாரபட்ச நடவடிக்கை: திமுக தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பாட்டிலுக்கு 20 ரூபாய் கூடுதலாக வாங்கினாலும் நடவடிக்கை இல்லை. ஆனால், அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் சிறு தவறு செய்தால் கூட உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்படுகிறார்கள். வரும் தேர்தலில் பழனிசாமி மீண்டும் முதல்வர் ஆவார் . அப்போது டாஸ்மாக் தொழிலாளர்களுக்கு விடிவு காலம் பிறக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

## ‘தேமுதிக எல்லாம் ஒரு கட்சியா?’ ராஜ கண்ணப்பனின் சர்ச்சை கருத்தால் திமுகவுக்கு நெருக்கடி




மதுரை: பிப்.13-

‘தேமுதிக இரு கட்சிகளிடமும் ஒரே நேரத்தில் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. தேமுதிகவெல்லாம் ஒரு கட்சியா? பெரிய கட்சியை பற்றி கேளுங்கள் என்று திமுக அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

‘தமிழ்நாடு தலைகுனியாது’ என்ற தலைப்பில் மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் தொடர்ந்து பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனையூரில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சிறப்புரையாற்றினார். அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முன்னதாக, மதுரை மாவட்டம் மேலூரில் திமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பேசியதாவது: தற்போது போட்டி திமுகவுக்கும், தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இடையேதான். ஆர்.பி.உதயகுமார் தென் மாவட்ட அதிமுகவில் தன்னை பெரிய ஆளாக நினைக்கிறார்.

அவர் பெரிய ஆளாக இருக்கட்டும். ஆனால், ஒருவரை அழித்து பெரிய ஆளாகிவிடக் கூடாது. தான் வாழ பிறரை கெடுக்கக் கூடாது. மேலூர் தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துள்ளோம். இந்த முறை மேலூரில் திமுகதான் போட்டியிடும். வேட்பாளரை தலைமை முடிவு செய்யும். காங்கிரஸ் கட்சி வேண்டாம் என்று சொல்லவில்லை. கூட்டணியில் வேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

விஜயகாந்த் இருந்தபோது தேமுதிக எதிர்க்கட்சியாக இருந்தது. இல்லை என்று நாம் சொல்ல முடியாது. தேமுதிக இரு கட்சிகளிடமும் கூட்டணி பேசக்கூடாது. இங்கேயும் பேசுவது, அங்கேயும் பேசுவது என்பது சரியாக வராது. விசுவாசமாக இருந்தால் ஒரு பக்கம்தான் இருக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

தொடர்ந்து செய்தியாளர்கள், தேமுதிகவை பற்றி கேட்டபோது, ‘தேமுதிகவெல்லாம் ஒரு கட்சியா, பெரிய கட்சிகளை பற்றி கேளுங்கள்’ என்று கூறினார். அண்மையில் புதுக்கோட்டையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, ‘காங்கிரஸில் இருந்து கொண்டு சிலர் உயிரை வாங்குகிறார்கள்’ என்ற அவரது பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், மதுரை மாவட்டம் மேலூரில் அவர் தேமுதிகவை விமர்சித்து பேசியது, அக்கட்சியுடன் கூட்டணி வைக்க முயற்சிக்கும் திமுகவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

## என்எல்சி நிறுவனத்தில் ரூ.442 கோடி முறைகேடு: சிபிஐ விசாரணை நடத்த ஐகோர்ட் உத்தரவு



சென்னை: பிப்.13-

என்.எல்.சி. நிறுவனத்தில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கியதில் நடந்த 442 கோடி ரூபாய் முறைகேடு குறித்து புகார்தாரரிடம் ஆதாரங்களைப் பெற்று விசாரணை நடத்த சிபிஐக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில், பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்கியதில், 442 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி, கடலூரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் சிபிஐயிடம் புகார் அளித்துள்ளார்.

எந்த நடவடிக்கையும் எடுக்காததால், தனது புகார் மீது வழக்குப்பதிவு செய்ய சிபிஐக்கு உத்தரவிடக் கோரி மணிகண்டன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அதில், சாம்பல் விற்பனை, ஒப்பந்த விதிகளுக்கு மாறாக, காலாவதியான டெண்டர்களின் காலத்தை நீட்டித்தது; 73,000 டன் அளவுக்கு செம்மண்ணை சட்டவிரோதமாக அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் என்.எல்.சி. அதிகாரிகள் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த மனு நீதிபதி எம்.நிர்மல் குமார் முன் விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தனது புகார் தொடர்பான முழு ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், விசாரணைக்கு அழைத்தும் ஆஜராகவில்லை என்றும் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு முகாந்திரம் இல்லாமல், நேரடியாக வழக்குப்பதிவு செய்ய முடியாது எனத் தெரிவித்த நீதிபதி, என்.எல்.சி. உயர் அதிகாரிகளுக்கு எதிரான புகாருக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதேபோல, சிபிஐ விசாரணைக்கு அழைத்தால் ஆஜராகி, ஆதாரங்களை சமர்ப்பித்து, விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதி, ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி, சட்டப்படி நடவடிக்கை எடுக்க சிபிஐக்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

## ‘வெளிநாட்டு ரயில்களை விட வந்தே பாரத் கட்டணம் குறைவு’

புதுடெல்லி, பிப்.13.-

ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: ரயில் கட்டணத்தை தீர்மானிக்கும்போது, சேவைக்கான செலவு, சேவையின் மதிப்பு, வழங்கப்படும் சேவையின் வகை மற்றும் வசதிகள், மக்களின் வாங்கும் திறன் ஆகிய அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

கடந்த 2019ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட வந்தே பாரத் ரயில் சேவை 82 வழித் தடங்களில் 164 ரயில்கள் இயக்கப்படுகின்றன. 300 முதல் 400 கிலோ மீட்டர் பயணத்துக்கான வந்தே பாரத் ஏசி பெட்டிகளின் இருக்கைக்கான கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் ரூ.2.19 ஆக உள்ளது. இது சீனா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள இதேபோன்ற ரயில் சேவை கட்டணத்துடன் (ரூ.7 முதல் ரூ.20) ஒப்பிடும்போது மிகவும் குறைவு ஆகும்.





# 18 அம்சக் கோரிக்கைகள் வலியுறுத்தி சிவகங்கையில் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் ஆர்ப்பாட்டம்

சிவகங்கை பிப் 13.-

சிவகங்கை தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில மைய முடிவின்படி, 10.02.2026 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இரண்டாவது நாளாக சிவகங்கையில் மாவட்டத் தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வீடுகட்டும் திட்டத்திற்கு புதிய பணியிடம் வழங்கல், புதிய ஊராட்சிகள் உருவாக்கல், உள்ளாட்சி தேர்தல் உடனடி நடத்தல், ஊராட்சி செயலர்களை ஒய்வூதியத் திட்டத்தில் இணைத்தல் உள்ளிட்ட 18 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மாவட்டத் தலைவர் பா.லூயிஸ் ஜோசப் பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்வேறு சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

# முதலமைச்சரை மரியாதை நிமித்தமாக வரவேற்ற சிவகங்கை சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர்

சிவகங்கை பிப் 13.-

தமிழ்நாடு முழுவதும் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தந்த போது முதலமைச்சரை, சிவகங்கை மாவட்டத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளருமான சாய் சுரேஷ் என்ற ராமநாதன் , தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மற்றும் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் ஆகியோருடன் இணைந்து மகிழ்ச்சியுடன் மரியாதை நிமித்தமாக வரவேற்றார்.



இந்த நிகழ்வு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியது.



# உதகை அரசு ரோஜா பூங்காவில் கோடை பருவ காலத்தை முன்னிட்டு ரோஜா செடிகள் கவாத்து செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்

உதகை பிப் 13.-

நீலகிரி மாவட்டம் உதகை அரசு ரோஜா பூங்காவில், கோடை பருவகாலத்தை முன்னிட்டு, ரோஜா செடிகளில் கவாத்து பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்ட உதகை அரசு ரோஜா பூங்காவானது 1995ம் ஆண்டு ஐந்து படி மட்டங்களில் 4.40 ஹெக்டர் பரப்பளவில் நிறுவப்பட்டு சிறந்த முறையில் தோட்டக்கலை துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசு ரோஜா Hybrid Tea, Grandiflora, Floribundas, Miniatures ம் Creeper போன்ற பல்வேறு ரோஜா வகைகளை உள்ளடக்கியது.

இங்கு 4,301 ரோஜா இரகங்களில் சுமார் 32,800 ரோஜா செடிகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து உயிரியல் பண்முகத்தன்மையை வளப்படுத்தும் வகையில் 2024 ஆம் ஆண்டு புதிதாக 100 ரோஜா இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு ரோஜா பூங்காவானது 2006 ஆம் ஆண்டு ஜப்பானின் ஒசாகாவின் உலக ரோஜா சங்க சம்மேளனத்திடமிருந்து Garden Of Excellence என்ற விருதினை பெற்றுள்ளது.

மேலும், அரசு ரோஜா பூங்காவானது தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே மிக அதிகமான ரோஜா இரகங்களை கொண்ட பூங்காவாக திகழ்வதோடு நீலகிரி மாவட்டத்திற்கும், நமது மாநிலத்திற்கும் மற்றும் இந்திய நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. ஆண்டுதோறும் சுமார் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் ரோஜா பூங்காவிற்கு வருகை புரிகின்றனர்.

இவ்வாண்டு கோடை பருவகாலத்தை முன்னிட்டு தற்போது கவாத்து பணிகள் மேற்கொள்வதன் மூலம் ஏப்ரல் மாதம் முதல் ரோஜா செடிகளில் மலர்கள் பூத்து குலுங்குவது சுற்றுலா பயணிகளின் கண்களுக்கு விருந்தாக அமையும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தோட்டக்கலை இணை இயக்குநர் நவநீதா, தோட்டக்கலை துணை இயக்குநர் (பண்ணைகள்) பபிதா, தோட்டக்கலை உதவி இயக்குநர் (நடவுபொருள்) ஜெயந்தி பிரேம்குமார், தோட்டக்கலை உதவி இயக்குநர் (ரோஜா பூங்கா உதகை) பைசல், தோட்டக்கலை அலுவலர் திருமதி மேனகா, துணை தோட்டக்கலை அலுவலர் ரா.செல்வகுமார் உட்பட

# தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக தாமஸ் ஆல்வா எடிசன் பிறந்தநாள் விழா

காளையார் கோவில் பிப் 13.-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டம் சார்பாக தாமஸ் ஆல்வா எடிசனின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமை ஆசிரியர் தெய்வானை தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியர்




தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி மென்லோ பார்க் வழிகாட்டி என்று அறியப்படும் தாமஸ் ஆல்வா எடிசனின் அளப்பரிய சாதனைகளான மின்விளக்கு ஒளிப்பதிவு கருவி திரைப்பட கேமரா போன்ற 1093 புதிய கண்டுபிடிப்புகளும் மக்களால் நினைவு கூறப்படக்கூடியதாகவும் நான் 10,000 முறை தோல்வியடையவில்லை. வேலை செய்யாத 10,000 வழிகளைக் கண்டறிந்துள்ளேன் என்பது எடிசனின் புகழ்பெற்ற கூற்றாகும். தோல்விகளே வெற்றிக்கான படிக்கட்டுகள் என்பதை அவர் தனது வாழ்க்கை மூலம் நிரூபித்தார் எனவும் அவருடைய சிறப்புகளை நினைவு கூர்ந்தார். மகிழ் முற்றம் சார்பாக ஒவ்வொரு அணிகளும் தங்கள் அணியில் உள்ள மாணவ மாணவிகளை அறிவியல் கண்காட்சிக்கு தயார்படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியர்கள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மை குழு செயற்குழு உறுப்பினர்கள் சத்துணவு உதவியாளர்கள் அஞ்சலை கஸ்தூரி சிலம்பம் மாஸ்டர் ராதா கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மதுரையில் காவலர்களுக்கான சாலை பாதுகாப்பு கருத்தரங்கு: 350 பேர் பங்கேற்பு

மதுரை பிப் 13.-

மதுரை ரிசர்வ் லைன் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆறாம் அணியின் காவலர்களுக்கென, சாலை பாதுகாப்பு குறித்த மூன்று நாள் சிறப்பு செய்முறை வகுப்புகள் மற்றும் கருத்தரங்கு நேற்றுடன் நிறைவடைந்தது.

முக்கிய நிகழ்வுகள்:

கடந்த பிப்ரவரி 9ஆம் தேதி (திங்கட்கிழமை) தொடங்கி நேற்று 11ஆம் தேதி (புதன்கிழமை) வரை நடைபெற்ற இந்த விழிப்புணர்வு முகாம், தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆறாம் அணியின் கமாண்டெண்ட் மதுக்குமாரி IPS உத்தரவின் பேரில் நடைபெற்றது.

மேற்பார்வை: துணை கமாண்டென்ட் தாமஸ்

முன்னிலை: உதவி கமாண்டென்ட் மான் சிங்

பயிற்சியாளர்: மதுரை மாநகர் திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி



பயிற்சியின் நோக்கம்:

இந்த மூன்று நாள் வகுப்புகளில், திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி அவர்கள் பின்வரும் தலைப்புகளில் செய்முறை விளக்கங்களை வழங்கினார்:

சாலை பாதுகாப்பின் அவசியம் மற்றும் போக்குவரத்து விழிப்புணர்வு. விபத்தில்லா பயணத்தை உறுதி செய்யும் முறைகள். சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதில் காவலர்களின் முக்கியப் பங்கு.

உறுதிமொழி மற்றும் பங்கேற்பு: பயிற்சியின் இறுதி நாளான இன்று, கலந்து கொண்ட அனைத்து காவலர்களும் அதிகாரிகளும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுடன் செயல்படுவோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்த முகாமில் ஆறாம் அணியைச் சார்ந்த 300 காவலர்களும், 50 காவல் துறை அதிகாரிகளும் என மொத்தம் 350 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டத்தில் வாக்குச்சாவடி மையமான சி.இ.ஓ.ஏ பள்ளியில் முன்னேற்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., ஆய்வு மேற்கொண்டார்.

# சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்ப மனுதபால் மூலம் அனுப்பி வைத்த தவெக நிர்வாகி

மானாமதுரை பிப் 13.-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில், தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் விருப்ப மனு அளித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விருப்ப மனுத் தாக்கல்

மானாமதுரை தவெக தீவிர தொண்டர் மலைச்சாமி. ஆட்டோ ஓட்டுநராகப் பணியாற்றி வரும் இவர், நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார். இதற்காக, தனது விருப்ப மனுவை மானாமதுரை தபால் நிலையம் வழியாகப் பனையூரில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்.




பின்னணி

கட்சியின் தீவிரத் தொண்டராகச் செயல்பட்டு வரும் மலைச்சாமி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு கவனம் ஈர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அவர் முறைப்படி கட்சி சார்பில் போட்டியிட ஆர்வம் காட்டி வருவது மானாமதுரை அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

# தேனியில் அரசு வேலை மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

தேனி பிப். 13.-

தேனியில் மகளிர் திட்ட அலுவலகத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு தகுதியுள்ள பெண்கள் விண்ணப்பிக்கலாம்



என மாவட்ட ஆட்சியர். ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார். இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் பெண்கள், தங்களது விண்ணப்பங்களை பிப்ரவரி 16ம் தேதி மாலை 5.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

முகவரி: மகளிர் திட்ட இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தேனி. மேலும் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது..

# 81 நாட்களுக்குப் பிறகு மானாமதுரை பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் இயக்கம்: பொதுமக்கள் மகிழ்ச்சி!

மானாமதுரை, பிப் 13.-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்று வந்த அலங்கார வளைவு மற்றும் நுழைவாயில் கட்டுமானப் பணிகள் காரணமாக, கடந்த 81 நாட்களாக பேருந்து சேவை நிலையத்திற்குள் முடங்கியிருந்தது. தற்போது இப்பணிகள் முழுமையாக நிறைவடைந்ததை அடுத்து, பேருந்துகள் மீண்டும் நிலையத்திற்குள் செல்லத் தொடங்கியுள்ளன.



தொடர் போராட்டமும் தீர்வுமே பணிகள் தாமதமானதால், மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையிலேயே பேருந்துகள் நின்று சென்றன. இதனால் பயணிகள் நீண்ட தூரம் நடக்க வேண்டிய சூழலும், விபத்து அபாயமும் நீடித்து வந்தது. மேலும், பேருந்து நிலைய வியாபாரிகள் மக்கள் நடமாட்டம் இன்றி கடும் நஷ்டத்தைச் சந்தித்து வந்தனர்.

இது தொடர்பாகப் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தரப்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று, நகராட்சி நிர்வாகம் பணிகளை விரைந்து முடித்து பேருந்து சேவையைத் தொடக்கி வைத்துள்ளது.

இயல்பு நிலைக்குத் திரும்பிய பேருந்து நிலையம்

81 நாட்களுக்குப் பிறகு பேருந்துகள் அணிவகுத்து உள்ளே வந்ததால் பேருந்து நிலையம் மீண்டும் களைகட்டியுள்ளது.

* பயணிகள் நிம்மதி: வெயிலிலும் மழையிலும் நெடுஞ்சாலையில் காத்திருந்த பயணிகள் இப்போது நிழற்குடையின் கீழ் பாதுகாப்பாகப் பயணிக்க முடிகிறது.

* வியாபாரிகள் மகிழ்ச்சி: மீண்டும் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், வாழ்வாதாரம் பாதிக்கப்படைந்திருந்த கடை உரிமையாளர்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

பணிகளை விரைந்து முடித்து பேருந்து போக்குவரத்தைச் சீர்செய்த நகராட்சி நிர்வாகத்திற்குப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் கீழநெட்டூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் படித்து வரும் கவிஸ்வரன் ஐந்தாம் ஆண்டு தமிழரசன் நான்காம் ஆண்டு படித்து வரும் குழந்தைகள் காரைக்குடியில் நடந்த சதுரங்க போட்டிகள் மாவட்ட அளவில் இதில் தமிழரசன் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் விளையாட்டில் முதல் பரிசை தட்டி சென்றார் கவிஸ்வரன் மூன்றாம் பரிசு தட்டி சென்றார் குழந்தைக்கு சகோதரர் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர்.




## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம்

தென்காசி பிப் 13.-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் தொழில் முனைவோர் கருத்தரங்கம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் (11.02.2026) முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் தொழில் முனைவோர் கருத்தரங்கம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல் என மொத்தம் 21 மனுக்கள் முன்னாள் படை வீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களிடமிருந்து பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் உரிய துறைகளுக்கு தக்க நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், உதவி இயக்குநர் மேஜர் மரு.ப.அருள் அஸ்வின் (ஓய்வு), மேலாளர் திருமதி.மாரியம்மாள் (மாவட்ட தொழில் மையம்), உதவி இயக்குநர் திரு.கோபிநாத் (திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்) மற்றும் 70க்கும் மேற்பட்ட முன்னாள் படைவீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.



## வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 தொடர்பாக நடைபெற்றது

தேனி பிப். 13.-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தேனி மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகள் குறித்து வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.கோவிந்தராவ் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், முன்னிலையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி 01.01.2026 ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, சிறப்பு தீவிரத்திருத்தம் பணிகளில் கடந்த 19.12.2025அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

மேற்கண்ட சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளில் வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்தல், நீக்கம், வெளியூர் சென்றவர்கள், இரட்டைப்பதிவில் இடம்பெற்றவர்கள் குறித்த புள்ளி விவரங்களை வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். மேலும், வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகளில் பெறப்பட்ட படிவங்களில் (படிவம்6, 7, 8)

உரிய அலுவலர்கள் மேலோட்ட ஆய்வு (ஷிஹூஜீமீக்ஷீ சிலீமீநீளீ) மேற்கொள்ள வேண்டும் என்றும், மேலும், பொதுமக்களிடமிருந்து தேர்தல் தொடர்பாக வரப்பெறும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளவும், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு தேவையான பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனவும், வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர். ரஜத் பீடன், வாக்காளர் பதிவு அலுவலர்/ மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, வாக்காளர் பதிவு அலுவலர்/ உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது, வாக்காளர் பதிவு அலுவலர்/ தனித்துணை ஆட்சியர். கவிதா, உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர் (தேர்தல்).சுருளி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கையில் வீடுதோறும் விசில் அடித்து தவெகவிற்கு ஆதரவு திரட்டிய மகளிர் அணியினர்

சிவகங்கை, பிப் 13.-

சிவகங்கை நகராட்சியில் தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) மகளிர் அணியினர் மற்றும் நகர நிர்வாகிகள் இணைந்து, வீடு வீடாகச் சென்று விசில் ஊதி நூதன முறையில் ஆதரவு திரட்டினர்.

விசில் சின்னத்துடன் தேர்தல் பரப்புரை

சிவகங்கை நகராட்சி 21வது வார்டில் தவெக நகர நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். வார்டு முழுவதும் உள்ள வீடுகள் மற்றும் கடைகளுக்குச் சென்ற அவர்கள், கட்சியின் கொடி மற்றும் விஜய் படம் பொறித்த ஸ்டிக்கர்களை ஒட்டினர். மேலும், அங்குள்ள சிறுவர்களுக்கு விசில்களை அன்புப் பரிசாக



வழங்கினர். சிறுவர்களும் மகிழ்ச்சியுடன் விசில்களை ஊதி உற்சாகப்படுத்தினர்.

எதிர்ப்புக்குப் பதிலடி

முன்னதாக, 21வது வார்டு திமுக நகராட்சி கவுன்சிலர் அயூப்கான், தனது பகுதியில் குப்பை சேகரிக்க வந்த தூய்மைப் பணியாளர்களிடம் இருந்த விசில்களைப் பிடுங்கி ஒளிபெருக்கியை வழங்கியதாக ஒரு வீடியோ வைரலானது. தங்கள் வார்டில் விசில் சத்தம் கேட்கக்கூடாது என அவர் பேசியதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாகத் தவெகவினர் இந்த விசிலூதும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது குறித்து தவெக மகளிர் அணியினர் கூறுகையில்:

"எங்களது விசில் சின்னத்தை அவமதிக்கும் வகையில் தூய்மைப் பணியாளர்களிடம் விசிலைப் பறித்த சம்பவம் எங்களை அவமதிப்பதாகக் கருதுகிறோம். இதற்குப் பதிலடியாகவே மக்களிடம் விசில் ஊதி ஆதரவு கோரினோம். எங்களை எதிர்க்க எதிர்க்க நாங்கள் மென்மேலும் வளர்வோம்".

ஆரோக்கியமான போட்டி

தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், ஒவ்வொரு கட்சியினரும் மக்களைக் கவரப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அரசியல் கட்சியினர் மோதல் போக்கைக் கடைப்பிடிக்காமல் ஆரோக்கியமான முறையில் போட்டியை வெளிப்படுத்தினால் மக்கள் அதனை வரவேற்பார்கள் எனச் சிவகங்கை நகர மகளிர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி தெரிவித்தார்.



## மானாமதுரை ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்பு மாதிரி பயிற்சி: மீட்புப் பணிகளில் அதிகாரிகள் தீவிரம்

மானாமதுரை, பிப் 13.-

மானாமதுரை ரயில் நிலைய சரக்கு யார்டு பகுதியில், தெற்கு ரயில்வேயின் மதுரை கோட்டம் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) இணைந்து நடத்திய பிரம்மாண்ட அவசரகால மாதிரி பயிற்சி (Mock Drill) இன்று வெற்றிகரமாக நடைபெற்றது.

ஒருங்கிணைந்த மீட்பு நடவடிக்கை

பெரிய அளவிலான விபத்துகள் அல்லது அவசர காலங்களில் பல்வேறு துறையினர் எவ்வாறு இணைந்து செயல்பட வேண்டும் என்பதைச் சோதிக்கும் வகையில் இந்தப் பயிற்சி அமைந்திருந்தது. இதில் மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகத்துடன் இணைந்து பின்வரும் துறையினர் பங்கேற்றனர்:

* தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) * காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறை * மீட்புப் பணிகள் மற்றும் சிவில் அதிகாரிகள்

பயிற்சியின் நோக்கம்

காலை 10:30 மணிக்குத் தொடங்கிய இந்தப் பயிற்சியில், தகவல் தொடர்பு அமைப்புகளின் வேகம், துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் அவசரகால பதிலளிப்புத் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டன. விபத்து காலங்களில் பயணிகளின் உயிரைக் காப்பதற்கும், விரைந்து மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் தேவையான தயார்நிலை குறித்து அதிகாரிகளுக்கு விளக்கப்பட்டது.

விழிப்புணர்வு மற்றும் நேரடி ஆய்வு

மீட்புப் பணியின் போது பயன்படுத்தப்படும் நவீன உபகரணங்கள் மற்றும் செயல்முறைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சி அமைந்திருந்தது.

மதுரை கோட்ட மக்கள் தொடர்பு அலுவலர் எம்.கே.கோபிநாத் தலைமையில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த மாதிரி பயிற்சி சிறப்பாகச் செய்து காட்டப்பட்டது. இந்தப் பயிற்சியின் மூலம், எந்தவொரு சவாலான சூழலையும் எதிர்கொள்ளத் தாங்கள் தயாராக இருப்பதாகப் பங்கேற்ற நிறுவனங்கள் உறுதிப்படுத்தின.



## திண்டுக்கல்லில் ரேஷன் அரிசி கடத்தலில் ஈடுபட்டவர் மீது குண்டர் சட்டம்

திண்டுக்கல். பிப் 13.-

திண்டுக்கல் பேகம்பூர், சிக்கந்தர் சாகிப் தெருவை சேர்ந்த முகமது ஷாபான் சேட்(25) ரேஷன் அரிசி கடத்தலில் ஈடுபட்ட இவரை நகர் டிஎஸ்பி.கார்த்திக் தலைமையிலான போலீசார் பிடித்து அவரிடமிருந்து 1.100 கிலோ ரேஷன் அரிசியை பறிமுதல் செய்து குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை போலீசாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் முகமது ஷாபான் சேட் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இவரின் குற்ற நடவடிக்கைகளை ஒடுக்கும் பொருட்டு குடிமைப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை மதுரை மண்டல ஷி.றி. சீனிவாசபெருமாள் பரிந்துரையின் பேரில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் அவர்கள் முகமது ஷாபான் சேட்டை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் ஓட்டுபட்டறை வெள்ளாளபுரம் பகுதியை சேர்ந்த விஜயகுமார் மகள் சாதனா படிப்பு செலவிற்காக. அம்மா பேரவை மாவட்ட செயலாளர் குன்னூர் சட்டமன்றமுன்னாள் உறுப்பினர் சாந்திராமு நிதியுதவி வழங்கினார்.

## சேம்பார் நடுநிலைப் பள்ளியில் கை கழுவுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி

காளையார் கோவில் பிப் 13.-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கை கழுவுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் சுரேஷ் கை கழுவுதல் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துரைத்தார். கை எவ்வாறு கழுவ வேண்டும் என்பதை செய்முறையாக செய்து காண்பித்தார். மாணவர்கள் பின்பு அந்த செய்முறைகளை பின்பற்றி கைகளை கழுவினர்.கை கழுவுதல் என்பது கைகளில் உள்ள அழுக்கு, வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களை அகற்றி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், கோவிட் 19 போன்ற தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும்



ஒரு மிக முக்கியமான சுகாதாரப் பழக்கமாகும். சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு குறைந்தது 20 வினாடிகள் கைகளை கழுவுவது கிருமிகளை நீக்கி, ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, மருத்துவச் செலவுகளைக் குறைக்கிறது.

கை கழுவுதலின் முக்கிய பயன்களாக நோய் தொற்று தடுப்பு: வயிற்றுப்போக்கு, சுவாச நோய்த்தொற்றுகள், மற்றும் கண்/தோல் நோய்களை உண்டாக்கும் கிருமிகளை அழித்து, நோய் பரவலைக் கணிசமாகக் குறைக்கிறது.

கைகளை சோப்பு போட்டு கழுவும்போது, கிருமி நாசினி தேவையில்லாமல் சாதாரண சோப்பே கிருமிகளை அகற்ற போதுமானது. உணவை சமைக்கும்போதும், உண்ணும்போதும் கைகளை கழுவுவது, கிருமிகள் உணவின் மூலம் உடலுக்குள் செல்வதைத் தடுக்கிறது.

குழந்தை ஆரோக்கியம்: குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு மற்றும் நிமோனியா போன்ற நோய்களைத் தடுக்க சரியான கை சுகாதாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. கைகளை கழுவுவதன் மூலம், நாம் தொடும் பொருட்கள் வழியாக கிருமிகள் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்கலாம்.

எப்போது கை கழுவ வேண்டும்?

உணவு உண்பதற்கு முன்/பின், கழிப்பறையைப் பயன்படுத்திய பின், இருமிய அல்லது தும்மிய பின், மற்றும் வெளியில் சென்று வந்தவுடன் கைகளை அவசியம் கழுவ வேண்டும் என்று தலைமையாசிரியர் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். ஸ்மார்ட் டிவியில் கை கழுவும் முறை பற்றி ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் காளீஸ்வரன் முத்துக்குமார் முருகன் சகாய செல்வி பாரதி மலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## ஊத்துக்கோட்டை பஜார் வீதியில் 80 வயது மூதாட்டி நாராயணியம்மாள் வாகன விபத்தில் வலது கால் முறிவு

ஊத்துக்கோட்டை, பிப்.13.-

பூண்டி ஒன்றியம் பிளேஸ்பாளையம் ராஜாவீதியை சேர்ந்த நாராயிணியம்மாள் (வயது80) க/பெ. சின்னப்பராஜ் என்பவர் 12.02.2026 காலை 11 மணி அளவில் தங்களது ஊரிலிருந்து பேருந்து மூலமாக ஊத்துக்கோட்டை பஜாரில் இறங்கி நடந்து வந்து கொண்டிருக்கும் போது நிலை தடுமாறி கீழே விழுந்தபோது ஆந்திராவில் இருந்து ஜல்லி ஏற்றி கொண்டு வந்த ஜிழி20கிணிஙி8070 எண்கொண்ட லாரி லோடு இறக்கிவிட்டு பஜார் வீதியாக திரும்பி ஆந்திரா செல்லும் போது விபத்து ஏற்பட்டதில் நாராயணியம்மாள் வலது கால் முறிவு ஏற்பட்டு மேல் சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் இது சம்பந்தமாக தகவல் அறிந்து வந்த ஊத்துக்கோட்டை சி1 காவல் நிலைய ஆய்வாளர் தலைமையில் போலீசார் விரைந்து வந்து விபத்து ஏற்படுத்திய வாகனத்தை கைப்பற்றி வழக்கு பதிவு விபத்து குறித்து விசாரித்து வருகின்றனர்.



## அங்காளம்மன் திருவிழாவை முன்னிட்டு காவேரிப்பட்டினத்தில் பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம்

கிருஷ்ணகிரி, பிப் 13.-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் வருகிற 16.02.2026 திங்கட்கிழமை நடைபெற உள்ள அங்காளம்மன் திருவிழாவை முன்னிட்டு, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய காவல்துறை சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இவ்விழாவில் சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திம்மாபுரம், மலையாண்டள்ளி மற்றும் காவேரிப்பட்டினத்தில் அமைந்துள்ள அங்காளம்மன் மற்றும் ஸ்ரீ பூங்காவனத்தம்மன் கோயில்களில் பக்தர்கள் அழகு குத்தி தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தும் வழக்கம் உள்ளதால், பெரும் திரளான மக்கள் கூடும் சூழல் உருவாகும். இதனால் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் கூட்ட நெரிசல் கட்டுப்பாடு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட கூடுதல் காவல் துணை கண்காணிப்பாளர் சங்கவி தலைமையில் காவேரிப்பட்டினம் காவல் நிலையத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், கோயில் நிர்வாகிகள், பொதுமக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் காவல்துறை ஆய்வாளர்கள் அறிவழகன், சிவசங்கர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பலர் பங்கேற்றனர்.

திருவிழா நாளில் கூடுதல் காவல் துறை பணியாளர்கள் நியமனம், சிசிடிவி கண்காணிப்பு, போக்குவரத்து மாற்று ஏற்பாடுகள், அவசர மருத்துவ உதவி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பொதுமக்கள் காவல்துறையுடன் ஒத்துழைத்து விழாவை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.



## பர்கூர் மேற்கு ஒன்றியத்தில் திமுகவினர் அதிமுகவில் இணைவு கே.பி.முனுசாமி முன்னிலையில் 30க்கும் மேற்பட்டோர் சேர்க்கை

கிருஷ்ணகிரி, பிப் 13.-

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதி பர்கூர் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த மாற்று கட்சியினர் அதிமுகவில் இணைந்தனர். பர்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் இ.சி. கோவிந்தராஜ் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், திமுகவைச் சேர்ந்த கனிமொழி தலைமையில் ராஜேஸ்வரி, மகேஸ்வரி, அருணா, சச்சின், பரத் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்டோர் அதிமுக துணைப் பொதுச் செயலாளர் மற்றும் வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. முனுசாமி முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார், அதிமுக பிரமுகர் நவாப், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோவிந்தசாமி, இளைஞர் அணி பாசறை செயலாளர் சரவணன், நாகராஜ், தாயப்பன், பசவராஜ், நாராயணன், முருகன், குரு, ரஞ்சித், மாதையன் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டு புதிய உறுப்பினர்களை வரவேற்றனர்.

பர்கூர் மேற்கு ஒன்றியத்தில் அதிமுக வலிமையை அதிகரிக்கும் வகையில் இந்த இணைவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## திருவையாறில்100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு

தஞ்சாவூர் பிப்.13.-

தஞ்சாவூர் அருகேதிருவையாறில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

நகராட்சித்தலைவர் கஸ்தூரி நாகராஜன் தலைமை வகித்தார், நகராட்சி துணைத் தலைவர் நாகராஜன், நகராட்சி ஆணையர் மதன்ராஜ், நடுக்காவேரி ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் பிரதீப்ராஜ் முன்னிலை வகித்தனர்.



நகராட்சி தலைவர் கஸ்தூரி 100 கர்ப்பிணி பெண்களுக்கு வளையல் அணிவித்து சமுதாய வளைகாப்பை தொடங்கி வைத்தார்.

இதில் திமுக ஒன்றிய செயலாளர் சிவசங்கரன், நகராட்சி கவுன்சிலர்கள் ராஜ்குமார், கிருபானந்தம், சேகர், ஜெயசீலி மற்றும் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கர்ப்பிணி பெண்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை மேற்பார்வையாளர் கலா ஒருங்கிணைத்தார்.

குழந்தைகள் வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆனந்தி வரவேற்றார், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெனிட்டா லூசியா மேரி நன்றி கூறினார்.

பட விளக்கம் திருவையாறில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பில் சமுதாய வளைகாப்பு விழாவை நகராட்சித் தலைவர் கஸ்தூரி நாகராஜன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார் ஆணையர் மதன்ராஜ் மற்றும் பலர் .




## கண்ணன்டஹள்ளியில் ரூ.19.88 லட்சத்தில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, மதியழகன் எம் எல் ஏ துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, பிப்.13:.-

மத்தூர் வடக்கு ஒன்றியம், கண்ணன்டஹள்ளி கிராமத்தில் பொது நிதி திட்டத்தின் கீழ், ரூ.19.88 லட்சத் தில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு பூமி பூஜை போடும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் வசந்தரசு தலைமை வகித்தார். முன் னாள் எம்எல்ஏ நரசிம் மன், ஒன்றிய செயலாளர் குமரரேசன், முன்னாள்சேர்மேன் விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிழக்கு மாவட்ட திமுக செயலா ளர் மதியழகன் எம்எல்ஏ கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்ட துணை செயலா ளர் நாகராஜ், இளைஞர்அணி மாவட்ட அமைப் பாளர் தினேஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பால்மூர்த்தி, வழக்கறிஞர் புகழேந்தி, முன்னாள். தலைவர் கதிர்வேல், சுப் பிரமணி, சென்னப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். வட் டார வளர்ச்சி அலுவலர் செல்லகண்ணால் நன்றி கூறினார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், கல்லாவி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.




## காரைக்குடியில் நாடு தழுவிய பொதுவேலை நிறுத்தம் — LIC ஊழியர்கள் சங்கம் மற்றும் தொழிற் சங்கங்கள் பங்கேற்பு

காரைக்குடி, பிப். 13.- :

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நாடு தழுவிய பொதுவேலை நிறுத்தம் 2026 பிப்ரவரி 12ஆம் தேதி காரைக்குடியில் லிமிசி கிளை அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு காரைக்குடி லிமிசி கிளை சங்க செயலாளர் தோழர் நெல்லியான் தலைமையேற்றார்.,தொழிற்சங்க நகரச் செயலாளர் தோழர் அழகர்சாமி மற்றும் பென்ஷன் சங்கத்தைச் சேர்ந்த தோழர் குணசேகரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றி, வேலைநிறுத்தத்தின் நோக்கங்கள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் குறித்து விளக்கமளித்தனர்.,இந்த வேலைநிறுத்தத்தில் வங்கி ஊழியர்கள், ரயில்வே ஊழியர்கள், பென்ஷன் சங்க உறுப்பினர்கள் மற்றும் கிளை சங்கத் தோழர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை பதிவு செய்தனர்.,முடிவில், கிளை சங்கத் தலைவர் தோழர் முத்துராமன் நன்றி உரை வழங்கினார்.

## கிருஷ்ணகிரியில் 20 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள் – பிப்.20க்குள் விண்ணப்பிக்கலாம்

கிருஷ்ணகிரி, பிப் 13.-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலுவலகத்தில் காலியாக உள்ள 20 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் 20.02.2026 மாலை 5.00 மணி வரை விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச. தினேஷ் குமார், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.



பர்கூர் (1), ஒசூர் (3), காலேரிப்பட்டி (2), கெலமங்கலம் (2), கிருஷ்ணகிரி (1), தளி (4), ஊத்தங்கரை (2), வேப்பனப்பள்ளி (1), சூளகிரி (2), மத்தூர் (2) ஆகிய 10 வட்டாரங்களில் உள்ள காலிப்பணியிடங்கள் வெளிச்சேவை முறையில் நிரப்பப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் ஏதாவது ஒரு பிரிவில் இளங்கலை பட்டம், 3 மாத கணினி சான்றிதழ், 30 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். மேலும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/சுயஉதவிக்குழுவில் குறைந்தது 5 ஆண்டு அனுபவம், இருசக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் அவசியம்.

தேர்வு செய்யப்படுவோர் 11 மாத ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவர். தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. மேலும் விவரங்களுக்கு இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வளாகம் (மகளிர் திட்டம்), அறை எண் 11, தரைத்தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி ௲ 635115 என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

## 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் – எம்.எல்.ஏ மதியழகன் தொடங்கி வைத்து சீர்வரிசை வழங்கினர்

கிருஷ்ணகிரி, பிப்.13.-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஸ்ரீ வெற்றிவேல் திருமண மண்டபத்தில் பர்கூர் மற்றும் கிருஷ்ணகிரி வட்டாரங்களைச் சேர்ந்த 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார்,பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்து, தாய்மார்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினர்.



விழாவில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர், மனிதவள மேம்பாட்டின் அடித்தளமாக பெண்கள் மற்றும் குழந்தைகள் திகழ்கிறார்கள் என்றும், குழந்தையின் முதல் 1000 நாட்கள் மிக முக்கியமானவை என்றும் தெரிவித்தார். கர்ப்பிணிகள் அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்து அரசின் ஊட்டச்சத்து பெட்டகம், மகப்பேறு உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்டங்களை பெற வேண்டும் என்றும், சத்தான உணவுகள் உட்கொண்டு, முறையான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் 5 வகையான ஊட்டச்சத்து உணவுகள், புடவை, வளையல், மஞ்சள், குங்குமம், பூ, பழம், தாம்பூலம் உள்ளிட்ட சீர்வரிசை வழங்கப்பட்டது. 2025–2026ஆம் ஆண்டில் மாவட்டத்தின் 10 வட்டாரங்களில் 1000 கர்ப்பிணி தாய்மார்களுக்கு இந்நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் தேன்மொழி, கிருஷ்ணகிரி வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் (பொ) பா.ஜாய் சுகந்தி, நகரமன்ற துணைத்தலைவர் சாவித்ரி, நகரமன்ற உறுப்பினர்கள் வேலுமணி, ஜாய் சுகந்தி,சரஸ்வதி, யாஷ்மின் அஸ்லாம், சீனிவாசன்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், நகரமன்ற பிரதிநிதிகள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161